# இடஒதுக்கீடு இனிக்கிறது... உள் ஒதுக்கீடு உதைக்கிறது..!

## தணலாகும் தலித் அமைப்புகள்




அருந்ததியருக்கு மூன்று சதவிகித உள் ஒதுக்கீடு வழங்கியதைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறார் டாக்டர் கிருஷ்ணசாமி. 'தாழ்த்தப் பட்டோருக்கான ஒதுக்கீட்டில் உள் இடஒதுக்கீடு கூடாது' என்று போராட்டங்களையும் நடத்தி வருகிறார். இதற்குப் பதிலடியாக அவரைக் கண்டித்து அருந்ததியர் அமைப்புகள் சில, கொடும்பாவி எரிப்பு சம்பவங்களில் ஈடுபட்டு வருவதால் மேற்கு மற்றும் தெற்கு மாவட்டங்களில் தலித்களுக்குள்ளேயே தகராறு வெடிக்கும் சூழல்!

தாழ்த்தப்பட்டோர்களான பள்ளர், பறையர், அருந்ததியர் ஆகிய மூன்று பிரிவினர்களுக்கும் சேர்த்து 18 சதவிகித இடஒதுக்கீடு ஏற்கெனவே இருந்து வந்தது. இதில் இருந்து அருந்ததியருக்கு மட்டும் மூன்று சதவிகித உள்ஒதுக்கீடு வழங்கி சில மாதங்களுக்கு முன்பு ஆணை பிறப்பித்தது தமிழக அரசு. இது தொடர்பாகக் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேயே ஆவேசப்பட்டு வெளிநடப்பு செய்த டாக்டர் கிருஷ்ணசாமி, "இந்த ஒதுக்கீடு ஆதி திராவிட மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சி!" என்று சாடினார். இதற்காகத் தொடர்ந்து எதிர்ப்புப் பிரசாரம் செய்துவரும் புதிய தமிழகம் கட்சியினர், உள் ஒதுக்கீட்டை ரத்து செய்யக் கோரி நவம்பர் மாதத் தொடக்கத்தில் சென்னையில் கிருஷ்ணசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.




இந்த விவகாரத்தில் இதுவரை மௌனமாக இருந்த அருந்ததியர் அமைப்புகள், இப்போது கிருஷ்ணசாமி கொடும்பாவி எரிப்பு சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றன. இதன் பின்னணியில் ஆளும் கட்சி இருப்பதாக சந்தேகம் கிளப்பும் 'புதிய தமிழகம்' கட்சி 1,000 இடங்களில் கருணாநிதியின் கொடும்பாவியை எரிக்கப்போவதாகத் திகில் கிளப்புகிறது.

இது தொடர்பாக நம்மிடம் பேசிய அந்தக் கட்சியின் மாநில இளைஞர் அணிச் செயலாளரும் வக்கீலுமான பாஸ்கர் மதுரம், "அரசியலமைப்பு சட்டம் ஆர்ட்டிகிள் 18-ன்படி நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடுதான் இட ஒதுக்கீடு முறையை அமல்படுத்த முடியும். இது தெரிந்திருந்தும் அருந்ததியர் இன மக்களை ஏமாற்றும் நோக்கில் இந்த உள் ஒதுக்கீடு முறையை அறிவித்து இருக்கிறார் கருணாநிதி. மேற்கு மாவட்டங்களில் தி.மு.க. தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வருகிறது. அதை சரிசெய்வதற்காக, அங்கே கணிசமாக இருக்கும் அருந்ததியருக்கு பொய்யான உள் ஒதுக்கீட்டை அறிவித்து இருக்கிறார். பஞ்சாப் மற்றும் ஆந்திர மாநிலங்களில் இதுபோல் வழங்கப்பட்ட உள் இடஒதுக்கீட்டுக்கு அந்த மாநில உயர் நீதிமன்றங்கள் தடை விதித்துவிட்டன. அதேபோல் இங்கேயும் இதுவரை 14 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் மொத்தம் 76 சாதிகள் இருக்கிறார்கள். இவர்களில் ஆறு சாதியினரை உள்ளடக்கிய அருந்ததியர்களுக்கு மட்டுமே 3 சதவிகித ஒதுக்கீட்டை கொடுத்துவிட்டு எஞ்சிய 70 சாதியினர் 15 சதவிகிதத்தைப் பிரித்துக்கொள்ளுங்கள் என்றால் என்ன நியாயம்?


பாஸ்கர் மதுரம்

தங்களுக்கான மூன்று சதவிகித இட ஒதுக்கீட்டில் மட்டும் இல்லாமல் மற்றவர்களுக்கான 15 சதவிகித ஒதுக்கீட்டிலும் அருந்ததியர் போட்டிக்கு வரலாம் என்றும் சொல்கிறார்கள். மலம் அள்ளுவது, துப்புரவு உள்ளிட்ட பணிகளைச் செய்யும் அருந்ததியர் மக்களை முன்னுக்குக் கொண்டுவர கருணை அடிப்படையில் இந்த உள் ஒதுக்கீடு வழங்குவதாக அரசு சொல்கிறது. அப்படியானால், எஞ்சிய 15 சதவிகிதத்துக்குள் வரும் புதிரை வண்ணார், புதிரை சவரத் தொழிலாளி உள்ளிட்டவர்கள் இன்னும்

www.vikatan.com




**போராட்டத்தில் கிருஷ்ணசாமி...**

அடிமட்டத்தில் இருக்கிறார்களே... அவர்களுக்கு என்ன கருணை காட்டப்போகிறார்கள்? தாழ்த்தப்பட்ட மக்களுக்கான அரசுப் பணியிடங்கள் ஆயிரக் கணக்கில் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதை நிரப்ப அக்கறை இல்லாதவர்கள், இப்படி தலித் மக்களுக்குள் பிரிவினையைத் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம் தேடுவது நியாயமா?

கடந்த சில நாட்களில் கோவை, சத்திய மங்கலம் ஏரியாக்களில் மூன்று இடங்களில் ஆதித் தமிழர் பேரவை உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எங்கள் டாக்டரின் கொடும்பாவியை எரித்து இருக்கிறார்கள். பொதுவாக ஜாமீனில் வர முடியாத செக்ஷனில் வழக்குப்போடும் போலீஸார், இதில் மட்டும் சாதாரண செக்ஷனில் வழக்கு போட்டு குற்றவாளிகளை ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். போலீஸின் நடவடிக்கைகளைப் பார்த்தால்... கொடும்பாவி எரிப்பு சம்பவங்களின் பின்னணியில் தி.மு.க. இருப்பதாக நாங்கள் சந்தேகிக்கிறோம். இனி எங்களின் பதிலடியைப் பாருங்கள்!" என்றார் சவாலாக.

இது குறித்து ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமானிடம் பேசினோம். "எங்களைவிட்டுப் பிரிந்து சென்ற சிலர் கொடும்பாவி எரிப்பு சம்பவங்களில் ஈடுபட்டு இருக்கிறார்கள்; எங்களுக்கு அதில் சம்பந்தம் இல்லை!" என்றவர், "புதிய தமிழகத்தின் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் நான் மறுக்கிறேன். உள் இடஒதுக்கீடு என்பது அருந்ததியருக்குக் கிடைத்த வரப்பிரசாதம். அரசியலில் பின்தங்கிவிட்ட டாக்டர் கிருஷ்ணசாமி, மீண்டும் எப்படியாவது பிரபலமாக வேண்டும் என்பதற்காக இந்தப் பிரச்னையைக் கிளப்புகிறார்.



அதியமான்

சமுதாயத்தில் பின்தங்கியவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதுதான் இட ஒதுக்கீட்டுத் தத்துவம். பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு எப்படி உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டதோ... அப்படித்தான் இப்போது தாழ்த்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டில் அருந்ததியருக்கும் வழங்கப்பட்டு இருக்கிறது. ஒரு பிரிவில் ஒரு சாதியை நீக்குவதற்கோ, சேர்ப்பதற்கோதான் மத்திய அரசின் அனுமதி தேவை. மற்றபடி இடஒதுக்கீடு வழங்குவது மாநில அரசின் உரிமை. அதன்படி அருந்ததியருக்கான உள் இடஒதுக்கீடு சட்டத்துக்கு முறையான சட்டப் பாதுகாப்பு இருக்கிறது. உள் இடஒதுக்கீடு வழங்குவதற்கு முன்பு மருத்துவக் கல்லூரிகளில் அருந்ததியர் 11 பேருக்கு இடங்கள் கிடைத்தன. இப்போது அது 86 ஆகி இருக்கிறது. இதேபோல் பொறியியல் படிப்பில் 700 பேர் மட்டுமே சேர முடியும் என்ற நிலை மாறி, இப்போது 4,000 அருந்ததியர்கள் உள் இட ஒதுக்கீட்டின் மூலம் பொறியியல் படிப்பில் சேர்ந்து இருக்கிறார்கள்.

இது எதுவும் தெரியாமல் இந்த விஷயத்தில் கிருஷ்ணசாமி போன்றவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைக் குழப்புகிறார்கள். கிருஷ்ணசாமிக்கு இடஒதுக்கீடு இனிக்கிறது. ஆனால், உள் இடஒதுக்கீடு மட்டும் கசக்கிறது. தமிழகத்தில் பள்ளர், பறையர், அருந்ததியர் மூவரும் சம அளவில் இருக்கிறார்கள். ஆனால், இதுவரை ஆதிதிராவிடர்கள் என்ற பெயரில் ஒட்டுமொத்த சலுகைகளையும் பள்ளரும் பறையரும் மட்டுமே அனுபவித்து வந்தார்கள். இப்போது உள் இடஒதுக்கீட்டின் மூலம் அருந்ததியர்களும் அதில் பங்கு கேட்டு வருவதை சிலரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் பிரச்னையே!" என ஆத்திரத்தோடு முடித்தார் அதியமான்.

**- குள.சண்முகசுந்தரம்**

படம்: **சொ.பாலசுப்ரமணியன்**

www.vikatan.com